028

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி நிகழ்ச்சித்திட்டம்

இறுதிப் பரீட்சை – 2008

**ESP 1262** – ஆசிரியர் கல்வி நோக்குகள்.

காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

---

திகதி: 24.05.2008 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

---

மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

01. (i) இலங்கையில் உள்ள வெவ்வேறு வகையான ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் ஒழுங்கமைவு கட்டமைப்பினை (organizational structure) பரிசீலிக்க. (15 புள்ளிகள்)

(ii) ஏதாவது ஒருவகை ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தைத் தெரிவு செய்து ஆசிரிய பயிலுனர்களுக்கு (i) கல்விசார் திசைமுகப்படுத்தல் (ii) செயன்முறைசார் திசைமுகப்படுத்தல் (iii) தொழினுட்பம்சார் திசைமுகப்படுத்தல் என்பவற்றை வழங்குவதில் அதன் வகிபங்கினை மதிப்பீடு செய்க. (18 புள்ளிகள்)

02. (i) 'ஆசிரியர்களைப் பகிர்ந்தளித்தல்' என்ற தொடரின் பொருள் யாது? (05 புள்ளிகள்)

(ii) இலங்கையில் ஆசிரியர்களைப் பகிர்ந்தளிப்பதில் பாதிப்பினை ஏற்படுத்தும் முக்கிய பிரச்சினைகளை ஆராய்க. (14 புள்ளிகள்)

(iii) இலங்கையில் விளைத்திறனுடைய ஆசிரிய பகிர்வு முறையொன்றினை விருத்திசெய்ய உங்களது ஆலோசனைகளைத் தருக. (14 புள்ளிகள்)

03. (i) தொடருறு ஆசிரியர் கல்வியிலிருந்து தொடக்க ஆசிரியர் கல்வியினை வேறுபடுத்திக்காட்டுக. (08 புள்ளிகள்)

(ii) இலங்கையை விசேடமாகக் கருத்திற் கொண்டு ஆசிரியர்களுடைய வாண்மைவிருத்திக்கு தொடருறு ஆசிரியர் கல்வி ஏன் அவசியம் என்பதைப் பரிசீலிக்க. (12 புள்ளிகள்)

(iii) இலங்கையிலுள்ள தொடருறு ஆசிரியகல்வி நிகழ்ச்சித்திட்டங்களின் பலம், பலவீனங்களை ஆராய்க. (13 புள்ளிகள்)

04 (i) 'வாண்மை' என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக. (05 புள்ளிகள்)

(ii) வாண்மை சார்ந்த தொழில் ஒன்றின் அந்தஸ்தினைப் பேணுவதற்கு உதவும் ஐந்து(05) முக்கிய இயல்புகளை விபரிக்க. (12 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஆசிரிய வாண்மையில் நீங்கள் மேலே குறிப்பிட்டுள்ள இயல்புகள் காணப்படுகின்றனவா என ஆராய்க. (16 புள்ளிகள்)

05. (i) 'வலுவூட்டல்' (Empowerment) என்ற தொடரின் பொருள் யாது? (05 புள்ளிகள்)

(ii) ஆசிரியர் ஒருவர் வலுவூட்டல் பெறுவதற்கு அவசியப்படும் என நீங்கள் கருதும் ஐந்து(05) அம்சங்களை விளக்குக (13 புள்ளிகள்)

(iii) இலங்கையில் ஆசிரியர்கள் மாற்று முகவர்களாகச் செயற்பட அவர்களை வலுவூட்டுவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (15 புள்ளிகள்)

06. பின்வரும் கூற்றுக்கள் தொடர்பாக உங்கள் கருத்துக்களைத் தருக.

(i) 'ஆசிரியவாண்மையின் கௌரவத்தையும் தத்தம் வாண்மைக் கடமைகளை பயன்மிருந்த வகையில் நிறைவேற்றுவதையும் உறுதிப்படுத்த ஆசிரியர்கள் ஒழுக்கக்கோவையொன்றினை அனுசரித்து நடந்து கொள்ளல் வேண்டும்.'

(ii) 'நாட்டின் சமூக – பொருளாதார சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் எழுகின்ற சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதில் ஆசிரிய கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் கவனம் செலுத்த வேண்டும்.'

(iii) 'வாண்மைத்துவ சங்கம் ஒன்றில் அங்கத்துவம் பெற்றுக்கொள்ளல் ஆசிரியர் ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியமானதாகும்.'

(11 x 3 = 33 புள்ளிகள்)

{33 x 3 + 1 = 100 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)